உ

சிவமயம்.

# திருமயிலைக்கபாலீசர்

# நான்மணிக்கோவை.

## கற்பகவல்லியம்மன்பதிகம்

இஃது

திருமூலர்மரபிலெழுந்தருளிய

சதாசிவப்ரம்மேந்திர யோகீஸ்வரர்

மாணாக்கரான

தேனாம்பேட்டை

ம-ா-ா-ஸ்ரீ

சுப்பராயமுதலியாரவர்களால்

இயற்றி,

ஸ்ரீதயாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

தாரண௵ பங்குனி௴

# திருமயிலை

# ஸ்ரீ கபாலீசர் நான்மணிக் கோவை.

## கணபதி துதி.

முத்திதந்திடுமுக்கட்கபாலிமேற்
பத்திநான்மணிக்கோவைபகர்ந்திட
அத்திமாமுகனம்பொனடியிணை
நித்தமும்பணிந்தேத்திடுநெஞ்சமே.

## நூல்.

### வெண்பா.

பாணிசசிகொன்றைதும்பைபாதிரிநற்சண்பகமும்
பேணிச்சிரத்தணிந்தபெம்மானே - தாணுவே
தென்மயிலையாயென்றுதெய்வக்கபாலிகழல்
துன்மனமேநாடித்துதி (க)

### கலித்துறை.

துதிசெய்துருகித்தொழுதேத்தியே துயர்போயகன்று
டதிநிச்சயங்கொண்டுபோசாடவிகெடப்பாரின்மிசை
சதிசெயவித்தையகங்கரநீங்கச்சதானந்தமாம்
கதிதந்தருள்செய்மயிலாபுரியுறைகண்மணியே. (உ)

## விருத்தம்.

மணியேயுமையோர்புரத்துறையுமாசிலாதபரஞ்சுடரோ
பணியேனுனதுபொற்கழல்கள்பாவியேனிப்பாரின்மிசை
தணியாக்காமக்கனல்மூளத்தங்கும்சலதிதனில்மூழ்கிப்
பிணியாம்பவத்திலுழலெனையாள்பெம்மான்மயிலையெம்மானே

## அகவல்.

எம்மானிணையணிடியேத்தியிறைஞ்சிச்
சும்மாவிருக்கும்சுகநிலைபொருந்தா
தைம்பொறிப்புலன்வழியறிவிலாமனஞ்செல
வம்புசெய்மாயாமயக்கால்வருந்தி
அவித்தையின்வசமாயகங்கரத்துற்றுப்
பவப்பெருங்கடலிற்படிந்தினிதேங்கி
ஆசையாமகரவாய்ப்பட்டுழன்று
மோசமாமிருவினைத்திரையின்மொத்துண்டு
அறிவெனும்வங்கம்விடுத்தாதரவிலாப்
பிறவியந்தகன்போற்பேயினேன்புலம்பி
மறலியின்வசமாய்மனமிகநடுங்கிச்
சிறியன்கலங்கிடச்செய்திடனன்றோ
தருணமென்னையனேதாய்போலுகந்து
கருணைசெய்தடியன்கலக்கமும்போக்கி
வஞ்சமனத்தைவன்மையோடிருத்தி
அஞ்செழுத்துண்மையடியற்கருளித்
திருவடிதீக்கைசிறப்புடன்செய்து

கருநெறிப்புகுதாக்காட்சியுந்தந்து
நானீயவனெனநாடுமயலெழா
தினவுலகவியற்கையும்போக்கி
அசைவறுசித்திரமாமெனவடியேன்
நிசபரிபூரணநித்தியத்தழுந்த
ஒருமொழிபுகன்றருளுத்தமவுனது
திருவடியன்றித்திக்குவேறிலையே. (௪)

வெண்பா.

இல்லையல்லவென்றிலகுமெய்ப்பொருளைநோக்கிடினு
மல்லல்மயமாகவமையுமே - சொல்லரிய
ஆமுண்டெனவறையுமாரணத்தினுண்மைநிலை
ஓமென்றுரைப்பாயுகந்து. (௫)

கலித்துறை.

உகந்தேயுலகிற்குருவடிவாகிவந்துள்ளபடி
அகந்தையுநீக்கிவிட்டைம்புலச்சேட்டையறவகற்றி
இகந்தனிற்கண்டறிவேபொருளாகவெனையிருத்திச்
சுகந்தனிற்கூட்டிடுவாய்மயிலாபுரிச்சுந்தரனே. (௬)

விருத்தம்.

சுந்தரவதனமுடங்கலார்மயலிற் றேய்ந்தடியேன்சுகமகன்றே
சிந்தையுமயங்கிவீணில்நாள்போக்கும் சிறியனேனுய்வகையறி
யேன், எந்தையேகருணைசெய்யுநாளெந்நாளெழில்முல்லையசோ
குசண்பகமும், சந்ததம்பொருந்தும்சோலைசூழ்மயிலைச் சங்கரா
தத்துவப்பொருளே. (௭)

## அகவல்.

தத்துவமறியாச்சழக்கர்சந்ததமும்
முத்தியின்மார்க்கமுடிவினையுணரார்
போலிசித்தாந்தப்பூரியரந்தோ
சீலவாரியர்போற்சிறப்பொடுவேடம்
பூண்டுகொண்டுலகிற்பொருளலாப்பொருளை
மீண்டுமாண்டுளறிமிகமயலுற்றுப்
பூதிகாழாயம்பொலிமணிபுனைந்து
நீதியாசாரநெறியுற்றவர்போல்
வாய்மினுமினுத்துவஞ்சகம்செய்து
தாய்நிலையடைந்தசுத்தர்போற்காட்டிக்
குன்றுபோலாசை கொழுந்துவிட்டோங்க
நின்றுழல்வாதனைநீங்காநிதமும்
மனம்விடயததேமாறுதலைந்து
தினமதன்வசமாய்த்திரிந்துழன்றேங்கி
மையல்செய்மடவார்மயக்கத்தழுந்தி
உய்வகைகாணாதுலகெலாம்சென்று
அஞ்ஞானத்திமிர்கொண்டாணவமறமற்
சுஞ்ஞானியரைத்தாடணைபுரிந்து
சிவபரம்பொருளைச்சிந்தையிற்கண்டு
தவமடைந்தவர்போல்தானடித்திட்டு
மாயவஞ்சம்செய்மார்க்கமேபூண்டு
காயவாழ்வினைக்கருதியேயுழலும்

ஆபாசர்களிடமணுகாதகற்றிப்
பாபசம்சாரப்பந்தமும்போக்கிச்
சந்தசத்திரண்டுதன்மையுங்காட்டி
யுத்தியனுபவமொத்திடநாட்டிச்
சித்திரதீபம்போலசைவறவே
முத்தியாம்பரவையில்மூழ்கிடநாயேற்
குனதருள்புரிந்தாளுத்தமமயிலைக்
கனகவம்பலவாகாப்பதுன்கடனே. (அ)

வெண்பா.

கடபடம்போலேயுலகைக் காணாதழுந்தித்
திடமுறுமாமயலிற்சிக்கி-விடயமதி
லோடியுழல்நெஞ்சேயெளிர்மயிலைநாயகன்றாள்
பாடியுருகிப்பணி. (கூ)

கலித்துறை.

பணிந்தேத்திடாய்பவம்பாறிடவேபலகாலுநெஞ்சே
திணிந்தேயஞ்ஞானத்திமிரகன்றேறிடத்திண்ணமதாய்த்
துணிந்தேமறைமுடிவோர்ந்துமயிலைச்சுகப்பொருளை
மணந்தேயிரண்டற்றபேரின்பவாழ்வில்மகிழ்ந்துநில்லே. (க0)

விருத்தம்.

நின்றிடாய்மனனேமுடங்கலார்மயலைநீக்கியேநிசதுரியத்திற்
குன்றுபோலசையாதிருந்தறிவாகிக்கோதிலாவின்பவீடடைய
மன்றினில்விளங்குமயிலைநாயகனைமகிழொடுபூசனைபுரிந்து[தே.
சென்றினிவணங்காயிதுதகிசொன்னேன்சின்மயமாகுனவசிறந்

## நான்மணிக்கோவை.

### அகவல்.

சிறந்திடுமனனேசெப்பருமுலகிற்
பிறந்திறந்துழலும்பேதைமையகலச்
சாதனமோர்ந்துசகசமேபுரிந்
தாதரவாயரனடியனைப்போற்றி
சீவிசபேதச்சிக்கினையறுத்துப்
பாவசஞ்சாரப்படுவலைநீக்கி
நித்தியவநித்தியநிச்சயம்பூண்டு
சத்தியஞானத்தன்மையுந்தேர்ந்து
காமக்குரோதக்கடும்பாழகன்று
தாமதமுக்குணத்தன்மையும்போக்கிப்
பஞ்சேந்திரியங்களும்பரிந்தொன்றாகச்
சஞ்சிதமகலச்சமரசமாக்கிச்
சத்தொருமூன்றின்தன்மையுந்தேர்ந்து
பற்றறுதுரியபாதையுமோர்ந்து
யானெனதென்னுமகங்காரமறவே
ஞானவஞ்ஞானநடுநிலைதேர்ந்து
வோவியம்போலவொருசெயலின்றி
மேவுமூன்றவத்தைமின்னெனக்கடந்து
என்னையானறியவெனக்கருள்செய்து
அன்னைபோலுகந்தாதரித்தருளும்
சிற்பரம்பொருளைச்சின்மயவடிவைக்
கற்பனைக்குங்கருணையங்கடலை

அன்பொடுபாடியனுதினமேத்தி
என்புநெக்குருகியிருவிழிகசியத்
தோத்திரஞ்செய்துதூநெறியடைந்து
பார்த்திடுகருணைப்பரம்பொருளடியேன் (கரு)
கருவுறுவண்ணங்கடைக்கணுனைக்காய்
திருவளர்மயிலைத்தெய்வநாயகனே.

வெண்பா.

நாயகனைநான்முகனுநாரணனுங்காணாத
தூயமலர்ப்பாதம் தொழுதிறைஞ்சி - நேயமுடன்
ஏத்தித்துதிமனமேயீடணைகள்போயகலப்
போற்றிக்களிவாற்புகழ்ந்து. (கசு)

கலித்துறை.

புகழ்ந்தேமயிலைப்பதிவாழ்புராந்தகன்பூங்கழல்கள் (கஅ)
மகிழ்ந்தேத்திமாயமயக்கமும்போக்கிமடவரின
மிகழ்ந்தேயசைவறவேகமதாகியிலகுநிலை
அகழ்ந்தேகிடநெஞ்சமேயமனுலையுமாங்கில்லையே. (கச) நா

விருத்தம்.

இல்லையுண்டென்றுதேகபூரணம்மாயிலகிடுமயிலையெம்பரனே
அல்லல்களறவேயன்பொடுபோற்றியனுதினமுருகியேயணிர்
எல்லையதிறந்தபுண்ணியருன்னை டீரண்டறுமின்பவாழ்வடை
ந்தார், கல்விகேள்வியிலாப்பதகனேனுய்யக்கருணைவைத்தாண்
ருள்புரியே. (க[illegible]

## நான்மணிக்கோவை.

### அகவல்.

பரியெனுமயிலையிற்பொருந்துநாயகனே
கரியுரிபோர்த்தகருணையங்கடலே
நரிபரியாகநடித்திடுநம்பா
திரிபுரமெரித்தசின்மயப்பொருளே
அமரரைக்காக்கவாலமுண்டவனே
குமரனையீன்றகருணைப்பெருங்குன்றே
காமனைக்காய்ந்தகருணையங்கடலே
சோமனைத்தரித்தசுந்தரவடிவே
ஆற்றொடுதும்பையணிந்திடுமரசே
பார்த்தனுக்கிரங்குபசுபதிபரனே
அன்பர்கட்கருளுமாதிநாயகனே
இன்பொடுநின்றாளேத்திடாதேழையன்
வஞ்சனைகளவுபொய்வல்லகங்கரமொடு
சஞ்சலத்தழுந்திச்சந்ததமுழன்று
பொருளலாப்பொருளைப்பொருளெனக்கொண்டு
மருளினால்மயங்கிமாசுறுவேனை
அருகழைத்திருத்தியவித்தைநீறாக்கி
திருவடிநீறுடன்சிறப்புடனளித்து
முத்திபஞ்சாக்கரமுறையையுமியற்றி
சித்தமாசகலச்சிந்தையைத்திருத்தி
இனிப்பிறவாவணம்பேணியர்க்கருளிய
நனிச்சுகவீட்டுநற்றருமுத்திடமே

செய்வதுன்கடனேசிவபெருமானே
பையரவணிந்திடும்பார்வதிபாகா
வெள்விடையேறும்வித்தகவிடங்கா
வள்ளலுன்றுளில்வணங்கிவாழ்த்துவனே.

வெண்பா.

வாழ்த்துவாய்நெஞ்சேநீவள்ளல்மயிலேப்பரனைப்
பாழ்த்தபிறப்பறுக்கும்பண்ணவனைத் - தாழ்த்திறைஞ்சி
ஏத்தியுருகியிருவிழியுநீரிறைப்ப
போற்றிக்கபாலியடிபூண். (கஎ)

கலித்துறை.

பூண்டுகொள்வான்புரமூன்றெரிசெய்தவன்பொன்னம்பலத்
தாண்டவன்பாலற்குப்பாற்கடலீய்ந்ததயாபரனே
மீண்டும்வராநெறிநாயேற்கருளிமிகவன்புடன்
ஆண்டருள்வான்மயிலேப்பதிவாழ்ந்திடுமாரணனே.

விருத்தம்.

ஆரணமார்க்கத்துறுபொருளறியாதவத்திளுள்கழித்தனனம்
பூரணப்பொருளேசின்மயவடிவேபுராந்தகாபுனிதநீறணியும்
காரணக்கடலேகண்மணிபூண்டகபாலிநின்கண்ணருள்புரிந்து
தாரணிதன்னிலினிப்பிறவாததற்பதநிலேயுளைப்பாயே (கஅ)

அகவல்.

உரையொடுமனவாக்கிறந்தொருபடித்தாய்
கரைகடந்திலகுகருணையங்கடலில்

யானெனதறவேயடியனையிருத்தி
மோனவின்பமுழுதளித்தன்பா
இனிப்பிறவாநெறியெளியனேனடைய
தனித்தருள்செய்யுந்தத்துவப்பொருளே
கல்லாலின்கீழ்காணநால்வர்க்கு
நல்லறமுரைத்தஞானவாரிதியே
குருந்தின்கீழ்நற்குருவடிவாகி
இருந்துவாதவூரிறைக்கருள்செய்தவா
வாகீசர்க்குவருஞ்சமண்நீக்கி
யோகமெய்ஞ்ஞானமொருங்குடனருளியும்
சிரபுரத்துதித்தசெல்வர்க்கன்று
பரிவுடனமிர்தம்பகர்ந்தருள்செய்தும்
வன்றொண்டருக்காய்வலியவுகந்து
என்றொண்டனென்றேயின்புடனுண்டும்
முனிவர்கட்காகமோனவடிவாய்
இனியவட்டாங்கமின்புடனுரைத்தும்
ஆலவாயதனிலறுபத்துநாலு
கோலமாந்திருவிளையாடல்புரிந்தும்
நாடியுருகிடுநாயன்மார்கட்கு
தேடிவந்தாண்டுதிருவடியளித்ததும்
ஏழிலுறுபட்டிணத்திறைவர்க்குகந்து
அழிவிலாவின்பமருளியவியல்பும்
அரியயன்காணவண்ணாமலையிற்
றரியசொரூபமாய்த்தோற்றியதோற்றமும்

பார்த்தனுக்க கப்பரிந்துவேடுவனாய்
தீர்த்தவன்றுயரைத்திருவடியளித்ததும்.
அருவமாயுருவாயருவுருவமதாய்
திருமயிலைதனிற்சிறப்புடனெழுந்ததும்
திருபுண்டரமொடுதிகழ்மணிபூண்டு
பருவதபத்தினிபாகமேதுலங்க
மான்மழுவேந்தியமாசிலாமணியே
தான்தானகத்தனித்திடுபரமே
முப்புரமெரித்தமூவர் முதல்வா
நற்பரம்பொருளேதரணியிலுனது
பெருமையையுரைக்கப்பேயனுல்வசமோ
அருமறைமுடிவில்வாழண்ணல்நாயேன்றன்
செய்பிழைபொறுத்துசிக்கெனக்காப்பாய்
அய்யனேயுன்றனடைக்கலம்யானே. (௨0)

வெண்பா.

அடைக்கலமென்றேற்குகந்தன்புடனே
கடைக்கணருள்செய்வாய்கபாலி - விடையுகந்த
வித்தகனேவேணியனேவேதமுடிவிளங்கும்
நித்தனேநின்னடிக்கீழ்நின்று. (௨௧)

கலித்துறை.

நின்றேயொருவழிப்பட்டன்பதாகநிதநிதமும்
சென்றேயுருகிமயிலைப்பிரானடிசேவைசெய்து
நன்றுகுஞானநடுநிலைதேர்ந்துநல்லன்பருடன்
ஒன்றாகிநின்றிடுவோம்மனமேயிதுவுத்தமமே. (௨௨)

## விருத்தம்.

உத்தமமானபிறவியிற்றோன்றியுள்ளவா றுண்மையையறியாப், பித்தனாய்மடவார்மையலுற்றேங்கிப்பின்னுங்காகாலமுங்கழித்தேன், அத்தனேநானையந்தகன்றூத ரடைந்திடிலென்செய்வதறியேன், சித்தம்வைத்தாள்வாய் மயிலைநாயகனே செல்வமேசிவபராஞ்சுடரே. (உங)

## அகவல்.

சுடரொளியாகிச்சோமசுந்தரனாய்ப்
படவரவணிந்தபசுபதிபரனே
வெள்விடையேறும்விண்ணவர்பிரானே
வள்ளலுனதடிவாழ்த்தித்துதியா
பாவசம்சாரப்படுகுழிவீழ்ந்து
காவியங்கண்ணார்கருத்தினுட்சிக்கி
யீடணைவசப்பட்டேங்கியுழன்று
நாடுமுன்னடியார்நாட்டமறந்து
காலங்கழித்திடுங்கடையேன்முனம்வந்
தாலமுண்டவனேயருட்கண்ணோக்கால்
சஞ்சிதமகலச்சாம்பவியருளி
மிஞ்சும்சாபமிகுநிலைகாட்டி
சிவீசுபேதச்செய்கையுமொழித்து
மேவும்பாக்கியமிகுநெறிகாட்டி
வாச்சியலக்ஷியவழியீதென்னக்
காச்சியபாலினெய்கலந்தாற்போல

நானீயதுவென்னுநாட்டமகலத்
தானெனையிருத்தித்தத்வமாக்கிச்
சின்மயவீட்டிற்சேர்ந்திடநாயேன்
கன்மமறுத்துக்காப்பதுன்கடனே
சென்மங்கழன்றிடச்செய்குவைபரனே
தன்மயமாக்குந்தற்பதப்பொருளே
மாவொடுதேமாமல்லிகைமுல்லைப்
பூவொடுகமழும்புகழ்மயிலையில்வாழ்
சச்சிதானந்தசங்கரசிவனே
அச்சுதனறியாவானந்தவடிவே
கச்சியிலம்மைகாணவந்தருளும்
உசசிதப்பொருளேயுமையொருபாகா
அங்கம்பெண்ணுருவாகவமைந்திட
சங்கையிலாதருள்சம்பந்தன்றொழும்
ஞானவாரிதியேநான்மறைப்பொருளே
மோனநிலையில்மூழ்கிடவழுத்தே. (உச)

வெண்பா.

வழுத்தொணுமுத்திரையைவந்தடியேற்கீந்து
பழுத்தவின்பமூட்டும்பரனே - எழுத்திறந்த
மோனநிலைகூட்டிடுவாய்முக்கணப்பாமுத்தியெனு
ஞானநிலைகாட்டிடுவாய்நன்கு. (உரு)

கலித்துறை.

நன்றென்றுந்தீதென்றுமில்லாநடுநிலைநாட்டமுற்றே
என்றுமிருந்திடுவாய்மன்னேயிதுவேசுகமா

மன்றியொருநிலையில்லைசொன்னேனறிவேண்டிவாய்
குன்றெனநின்றிடுவாயிதுவேகுருகூறியதே. (உசு)

விருத்தம்.

கூறுதற்கரியவொருமொழிமாவாக் கியந்தனைக்கொடியனே
ற்குரைத்து, நீறினைத்தரித்துசிவோகபாவனையாம் நிருவிகற்பத்
திலேநிறுத்தித், தேறிடவடியேன்கருணைநீபுரிவாய்திகழ்மயிலா
புரித்தேவே,ஆறினைச்சடையிலமர்த்தியபரனேயண்ணலேயான
ந்தவரசே. (உஎ)

அகவல்.

அரசாயாலவாயமர்ந்திடுபரனே
விரைசேர்ஞானவித்தகவிளக்கே
இவ்வுடல்விட்டுயிரோகிடுமளவில்
கவ்விடுபாசக்கனவருத்தத்தால்
நாடிநரம்புகள்நலிவுடனீற்க
வோடியவாயுவுமூர்த்தமேசெல்ல
அந்தக்கரணமடங்கியேநிற்க
சிந்தைகலங்கிச்சிறுமையடைந்திட
கபவாதபித்தம்கடிந்திணிதேற
சபமெனமெய்யும்சார்ந்துபொய்யாக
மனைமக்கள்சுற்றமருவியேகூடி
கனவருத்தத்தாற்கண்ணீர்விடுத்துப்
பாலினையள்ளிப்பருகவேகுத்தி
மாலினைக்கொண்டுமயங்கியேநிற்கக்

காலதூதர் கடுகிவந்தீர்க்கக்
கோலமாமுதிரங்குறைந்துநீராக
படுதுயரொளிதோபரமநாயகனே
அடுதுயர்க்கஞ்சியுன்னடியிணையடைந்தேன்
இவ்வகைத்துயரமெளியனேனுறுமற்
பவ்வமகற்றிப்பஞ்சாட்சரத்தி
னுண்மைநிலையுரைத்துனதருள்புரிந்து
சின்மயவீட்டிற்சேர்ப்பதுன்கடனே. (உஅ)

வெண்பா.

கடனுனக்குக்கண்ணுதலேகாலனென்முன்வாராத்
திடமருளித்தீவினையைநீக்கி - மடமகற்றி
ஆண்டருள்வாய்தென்மயிலையண்ணலேயாதரித்துத்
தாண்டவபொற்பாதமினித்தா. (உகூ)

கலித்துறை.

தாதாவடியெற்கிரங்குந்தயாநிதியேதமியேற்
காதாரமுன்றனடியன்றிவேறிலையன்புடனே.
நாதாந்தச்சோதியொளிவெளியாகியநாட்டத்திலே
வேதாந்தவேதியனேயிருத்தாயினிவித்தகனே. (௩0)

விருத்தம்.

வித்தகாமயிலைவிளங்கிடுபரனேவிண்ணவர்தொழுதிடும்விமலா
அத்தனேபொன்னம்பலத்துறையரனேயடிகடுமுடிவுமாய்நிறைந்த, சித்தனேசிவனேசின்மயப்பொருளே சிறியனேனினிப்பிறவாத,முத்தியிற்கூட்டியருள்புரிகபாலிமுக்கணுமூவர்கள்முதலே

## நான் மணிக்கோவை.

### அகவல்.

மு…நற்பொருளாகுமுக்கணாயகனே
பதநிச்சயமெலாம்பாழ்படநூறி
சமையகோரச்சழக்கினையகற்றி
இமையாநாட்டத்தெளியனையிருத்தி
வாசிவாவென்றும்வண்மையுரைத்து
பேசருகுண்டலிவழிபிசகாமல்
கும்பகம்செய்துகுறியுடனிறுவி
பம்பிடுமாருதம்பையவொடுங்க
சந்திரகலையில்தாக்கியேநின்று
சுந்தரவமுர்தச்சுகந்தனையுண்டு
ஆதாரமாறுமகன்று
சீரார்நடுநிலைசிறப்புடன்சென்று
ஆடுமமலத்தாட்டமடைந்து
நாடுநதெரிசனநலமுறக்கண்டு
உள்ளுளேசெல்லவொருவழியாகும்
விள்ளறுமோனவெறுவெளிதனில்
இரண்டறநாயேனெய்திடக்கருணைசெய்
புரம்பொடிபடுத்தபுண்ணியபுராணா
மாணனுக்காகப்பரிவுடன்றோன்றி
காலனைக்காய்ந்தகருணையங்கடலே
எவ்வெவர்வேண்டினுமிடைபுடனேதோன்றி
அ வவா கசருளு பானந்த மேமை

வந்திகண் காணவந்திடுபரனே
அந்தமிலாரியனாகியசிவனே
சுருதியுத்தி யனுபவமொத்திட
திருவருள்செய்யும்தெய்வநாயகனே
ஏழைபங்காளாவெம்பெருமானே
வாழியென்றுன்றாள்வழுத்துகின்றேனே. (௩௨)

வெண்பா.

இன்றுவருமோநாளைக்கேவருமோவெம்பெருமான்
குன்றனையஞானக்கொழுங்கருணை - என்றறியேன்
மாமயலில்நின்றேன்மயிலைக்கபாலியினிக்
காமமகலக்கடைக்கண்வை. (௩௩)

கலித்துறை.

கடைக்கண்வைப்பாய்கருணாகரனேகமழ்கங்கைசசி
சடைக்கரந்தேநிற்கும்சங்கரனேநின்சரணடைந்து
அடைக்கலமென்றனனாதரிப்பாயஞ்சலென்றுகந்து
விடைக்குகந்தேறிவந்தாள்மயிலாபுரிவேதியனே. (௩௪)

விருத்தம்.

வேதியர்நால்வர்க்கறமுரைத்தாண்டவித்தகாவிண்ணவர்கோவே
சோதிமாமணியேதசமுகனுடலம்சோர்வுறவிருத்தியசிவனே
பாதிமாதுமையாள்பங்கனேபரனேபசுபதிமயிலைமாநகர்வா
ழாதிநாயகனேயம்பலத்தாடுமண்ணலேயானந்தக்கடலே(௩௫)

அகவல்.

கடலமுதேசெங்கரும்பேகனியே
படவரவணிந்தபாசுபதாநின்
பொன்னடிவழுத்தும்புண்ணியருலகில்
மன்னியசரிதைமகிழ்வொடுகிரியை
யோகமுதலாயொருங்குடன்தேர்ந்து
ஏகபாவனையெளிதிலுணர்ந்து
சுருதியொத்துசொல்லருமனுபவம்
கருதியொத்துக்காமமிறந்து
நிருவிகற்பநிலைதனில்நின்று
கருவினிலுறுதகாட்சியடைந்து
முத்தியின்பமோனவடிவாய்
சத்தியஞானத்தன்மையுமுணர்ந்த
நித்தியற்பொற்சாண்நீசனேன்காணுப்
பித்தராயுலகிற்பிரவிச்சாகறத்
தெத்தனைசெனனமெடுத்தெடுத்தேங்கி
கற்றறிவில்லாக்கடையனேனந்தோ
உழலுவதழகோவுத்தமனேயுன்
கழலிணையிறைஞ்சிக்கசிந்துள்ளுருகி
உரோமஞ்சிலிர்த்துவோவென்றரத்திப்
பரமேசிவமேபராபரப்பொருளே
அரனேயாதியந்தமானவனே
திரிபுரமெரித்ததீனரட்சகனே

கரியுரிபோர்த்தகாரணககடலே
எரிமழுவேந்துமேகநாயகனே
ஓங்கருசரபமாயுயரவெழுந்து
பாங்கோடரிமயல்போக்கியபரனே
நித்தியநிட்களநிசபரிபூரண
சச்சிதானந்தசங்கரசிவனே
வெள்விடையேறும்வேதநாயகனே
விள்ளருஞானவித்தகவிளக்கே
பாகம்பெண்ணுருவாகியபதியே
ஏகநாயகனேயென்றடிவணங்கி
அன்புடன்பரவுமடியனைக்காத்து
இன்பவீடருளியிருவினைநீக்கி
இனிப்பிறவாநெறியெளியனேற்கருளி
தனிச்சுகமருள்வாய்தற்பரநாதா
மயிலையம்பதிவாழ்மாசிலாமணியே
உய்வடியேற்கினியுகந்துரைத்தருளே (௩௬)

வெண்பா.

உரையற்றுணர்வற்றுயர்மயலற்றின்பக்
கரையற்றுக்காண்பதுவுமற்று-திரையற்று
நீநானிரண்டற்றநேசமதேமுத்தியென்றான்
கோனமயிலைகுணக்குன்று.. (௩௭)

கலித்துறை.

குன்றைவில்லாகவெடுத்தேயரக்கர்குலமெரித்தாய்
பன்றிகட்கன்னையெனவேயுகந்தன்றுபாலளித்தாய்

மன்றிற்பதஞ்சலிவியாக்கிரமபாதர்மகிழநட்டம்
நின்றுபுரிந்தாய்மயிலாபுரிவருநித்தியனே. (ங௮)

விருத்தம்.

நித்தியநிமலநின்மலசொரூபநிகழ்பரிபூரணவடிவே
பத்தியாய்துதிசெய்யன்பர்களிதயபங்கயமேவிடுபரனே
வித்தகவேதப்பரியினிலேறும்விண்ணவர்நாதனேவினையேன்
சித்தமாசற்றுய்மயிலைநாயகனேசெல்வமேநின்மயவடிவே. ௩௯

அகவல்.

வடிவிலாவடிவேவானவர்கோவே
அடிமுடிநடுவீறுகியபரனே
எளியனேனுய்யவென்போலுருக்கொடு
வெளிவந்தன்பாய்விள்ளருஞான
மொழிதனையுரைத்துமோனநிலையின்
விழிதனைத்திறந்துவிழித்திடச்செய்து
பாருபாரெனப்பரிவுடன்கூறி
ஆருமறியாவன்பைப்பெருக்கி
உன்னையெனக்களித்துன்னடியானென
வென்னையுங்கொண்டுளளிதிலுணர்த்தி
குறிகுணமிறந்தகோதிலாவின்ப
வறிவடிவாகவாண்டருள்புரிவாய்
கயிலைநாயகனேகாமனைக்காய்ந்த
மயிலையம்பதிவாழ்மாணிக்கமணியே
அட்டமூர்த்தமதாயமர்ந்துநின்றவனே

சிட்டருக்குதவுஞ்சின்மயப்பொருளே
மரகதவடிவுடைமாணிக்கவல்லி
பரிவொடுமயிலாய்பன்மலர்கொண்டு
பூசனைபுரிந்துபுனிதவாழ்வடைந்து
நேசமாய்வணங்குநித்தியப்பொருளே
உன்னருட்டாகமுடையனுயினேன்
அன்னையொத்தருள்கஅருட்பாணியதே.

வாழ்க வாரியர் நால்வர்கண் மற்றையர்
வாழ்க சைவ மறையுட னாகமம்
வாழ்க கற்பக வல்லி மனோன்மணி
வாழ்க மாமயி லைம்மக தேவனே.

கபாலீசர் நான்மணிக்கோவை முற்றுப்பெற்றது.

# திருமயிலைக் கற்பகவல்லி யம்மன்

# நவமணிமாலை.

கலித்துறை.

நாயகிகற்பகவல்லியின்மீதுநயந்தடியேன்
நேயநவமணிமாலையன்பாகநிகழ்த்துதற்கு
ஆயுமறைமுடிதன்னினின்றோங்கிடுமானைமுகத்
தூயபொற்பாதந்தொழுமனமேசுகமேவிடவே.

விருத்தம்.

மறைமுடிவதனில்விளங்குநாயகியே மரகதமாணிக்கவடிவே
கறைமிடற்றண்ணலுடன்கலந்திலகுகற்பகவல்லியேகடையேன்
சிறைபடுபறவைபோலவேபாசச்சிக்கினிற்சிறியனேன்வீழ்ந்து
இறைவியேகாலங்கழித்தனனந்தோவென்செய்வே னிரங்கியா
[ண்டருளே. (க)

அருள்புரிமயிலைநாயகியடியே னவித்தையோடாசையுமறத்
துத், தெருள்புரிமடவார்மையலும்நீக்கிசிறியனேன்சிந்தையை
த்திருத்தி, தருமமேயுரைத்தாபாசமும்போக்கிதன்மயமாக்கினா
யேனும், கருவுருவண்ணம்காத்தருள்புரிவாய்கற்பகவல்லியென்
றுயே. (உ)

தாயினையன்றிச் சுதற்கொருதுணையுந் தாரணிதன்னில்வேறு
ண்டோ, நாயகிநாயேனின்னடிபோற்றி நாடொறுமுருகியேந
லிந்து, ஓய்விலாதரத்து மேழையுற்றிரங்கி யொருமொழியுண்
மையுமுணர்த்து, காயம்வீழாமுன்கருணைசெய்தருள்வாய் கற்ப
கவல்லிகண்மணியே. (ங)

மணியொளிர்வடிவே மாதவத்தோர்கள் மலர்கொடர்ச்சித்து
மால்நீங்கிப், பிணியெனும்பவத்துன்பகன்றுமெய்ஞ்ஞானம்பெ
ற்றனருனதுபேரருளாற், றணிவிலாநாயேன்விடயவர்தனையிற்
சந்ததமனஞ்செலச்சாம்பித், துணிவிலாதுழலு மெளியனைக்கா
ப்பாய் சுந்தரிமயிலைநாயகியே. (ச)

நாயகிநாயேனுயிர்பிரிகாலைநமன்றமர்கூட்டமாய்நண்ணித் [ன்
தீயெனும்பாசக்கயிற்றினாற்பிணித்துத்தீயனேன் றனைவருத்தாபு

காயவாழ்வினையுநீக்கியேயுனதுகருணையால்கவைக்கவேணைக்களி
த்துத், தாயெனக்காப்பாய் மயிலையம்பதிவாழ் தயாபரிதநியித்
தாயே. (௫)

தநியித்துதாயேதற்பராபரையே தமியனேனுய்யுமாறுகந்து
சதிசெய்மாமாயையகங்காரம்போக்கிச்சங்கரிசாம்பவியருளி
பதிநிலைகாட்டியசைவறுபாவையொத்திடைப்பாவியேனிருக்க
கதியினிற்கூட்டாய்மயிலையம்பதிவாழ்காரணிகற்பகத்தாசே.

அரசதாயகிலமாண்டறம்வளர்க்குமம்மணியானந்தவல்லி [து
விரிமலர்ச்சடையானிடப்புறமமையும்வித்தகிவினையனேற்குக்
பரிவொடென்முனம்வந் தவித்தையும்போக்கிபரமமெய்ஞ்ஞான
மேயருளி, துரியநன்னிலையிலிருத்திடாய்மயிலை சுந்தரிசுத்தமா
னவளே. (௭)

சுத்தவாசனையிற்பொருந்திடாதடியேன் சேர்வுறுமசுத்தமே
பொருந்தி, சித்தமுங்காலங் கழித்தனனந்தோ நின்மலிநினதரு
ள்புரிந்து சித்தமாசகற்றி யொருமொழியுணர்த்துச் சிவபரிபூர
ணத்தழுந்த, உத்தமியிருத்தாய்மயிலைநாயகியேயுனதுபொற்சர
ணடைக்கலமே. (௮)

அடைக்கலம்புகுந்தேனஞ்சலென் றருளி யவித்தையோடகங்
காரம்நீக்கி, கடைக்கண்வைத்தடியேனுய்யுமாறருளிக்காப்பதுன்
கடனலாதுண்டோ, சடைக்கணிற்சசியுங்கங்கையுந்தரித்தசங்
கரன்சந்ததமகிழ, இடைப்புரமமர்ந்தகற்பகத்தாசே யென்சொ
லியேத்திவாழ்த்துவனே. (௯

கற்பகவல்லி நவமணிமாலை முற்றுப்பெற்றது.

உ

கடவுள்துணை.

அருணகிரிநாதர்

அருளிச்செய்த

# கந்தரநுபூதி.

இஃது

சிவாத்துவிதசித்தாந்தியாகிய

திருமழிசை

முத்துச்சாமி முதலியார்

அவர்களால்

பலபிரதிகொண்டாய்ந்துதர,

செங்கற்பட்டு

சின்னசாமி முதலியார்

அவர்களால்

சென்னை:

மிமோரியலச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

:o:

1891

*Registered Copyright.*

கணபதி துணை

# இந்நூல் வரலாறு.

திருவண்ணாமலைத் தலத்தின்கண் சுப்பிரமணியக் கடவுளனுக்கிரகம்பெற்றுக் கௌமாரமதசித்தாந்தியாய் அருணகிரிநாதரென வழங்கும் பெயர்கொண்டொருவ ரிருந்தனர். அவரக் கடவுளால் பலகலைக ளோர்தப்பெற்று, ஆகாயகமனம் பரகாயப்பிரவேச முதலிய வித்தைகளையுங் கற்று, திருப்புகழ் வகுப்பு முதலிய பிரபந்தங்கள் அக்கடவுளுக்குப்பாடி மிகப் பிரசித்தியா யிருந்தனர். அவ்வூரின்கண்ணே சம்பந்தாண்டானென்னும் பெயர்பெற்ற ஓர் சமணகுருவானவன சாத்தேயமத சித்தாந்தியாய் சத்தியி னனுக்கிரகத்தினால் ஆகருடண முச்சாடன முதலிய வித்தைகளைக் கற்று மிகச் சதுரனாக விருந்தான். இவ்விருவரு மவ்வூராளும பிரபுடதேவராசனிடத்து நண்புகொண்டிருந்தார்கள். ஓர்நா ளிவ்வரசனவைக்கண் அவ்விருவருக்குந் தாங்கள் கற்றுள்ள வித்தைத் திறங்களில் வாதுநேர்ந்து, நம்மிருவரு ளிவ்வரசன முன்பு தன் தெய்வத்தன்மையைப் பிரத்தியக்ஷமாகக் காட்டவல்லவனே எல்லா வித்தைகளினுஞ் சமர்த்தனாவனறி இதிற்றோற்றவ னிவ்வூருக்குப் புறம்பாகக் கடவனென ஓர்சபத முண்டுபண்ணிக்கொண்டு, தாங்களத் தெய்வத்தன்மையைக் காட்டவேண்டுவதற்கான இடத்தையுந் தினத்தையு மரசனுக்குத் தெரிவித்துத் தத்த மிருக்கையைநோக்கிச் சென்றார்கள். உடனே பிரபுடதேவ ராசன தனனமைச

# இந்நூல் வரலாறு.

சரைக் கொண்டு அருணகிரிநாதர் குறித்த விடமாகிய அண்ணுமலையா ராலயத்துப் பதினாறுதூண் மண்டபத்தின் ஈசான திசைக்கணுள்ள ஓர் தூணின் சார்பாகத் தென்னோலையினால் ஓர்பந்தரும் சம்பந்தாண்டான் குறித்தவிடத்தில் ஓர்பந்தரும் போடுவித்து, அவ்விரண் டிடத்தும் பல குண்டம் வேதிகை முதலிய பூசாகருவிகளையு மமைப்பித்து எதிர்பார்த் திருந்தான. பின்னர் சம்பந்தாண்டான் தான் குறித்துக்கொண்ட நாளில் தனக்காக வமைத்துள்ள பந்தரின்கண் அரசனாதியரோடும் வந்து ஓமமாதிய சடங்குகளைச் சாத்தேயமத விதிப்படி நிறைவேற்றி உமையவளுடைய திரியாக்கர மந்திரத்தை அன்று மாலைவரையி லுச்சரித்துக்கொண் டிருக்கையில், அருணகிரிநாதருடைய வேண்டுகோளால் சண்முகதேவர் அவ்வுமையவள் மடித்தலத்தில் சிறுகுழந்தைப் பருவத்தினரா யமர்ந்து பல திருவிளையாடல்களைச் செய்துகொண்டு அவன் பூசை முகத்திற் செல்லவொட்டாது நிறுத்தினர். அதனால் சம்பந்தாண்டான் தன் சொல்லை நிறைவேற்றக் கூடாதவனாயினான். அதுகண்ட பிரபுடதேவ ராசன் முதலாயினோர் அவனைப் பலவாறு நிந்தித்துச் சென்றார்கள். அன்று போய் மறுநாள் சூரியோதய மானவுடன அருணகிரிநாதர் தமது சொல்லை நிறைவேற்றக் கருதி அவ்வரசனாதியரோடுந் தமக்கமைத்துள்ள பந்தரின்கண் வந்து சுற்றினுந் திரைகளை விடுத்து, அப்பந்தருளடங்கிய பதினாறுகான்மண்டப ஈசான்யமூலைத்தூணில் சிற்பியாற் சித்திரித்

துள்ள சுப்பிரமணியக் கடவுளுக்கு அபிடேகாதி யாராதனைக் கிரமங்களை நடத்திக் கௌமார மதாகம பூசாவிதிப்படி ஓமமாதிய சடங்குகளையு நிறைவேற்றிச் சண்முகதேவருடைய சடக்கர மந்திரத்தை யுச்சரித்துக்கொண் டிருந்தனர். அன்று மாலைப்போதில் சண்முகப்பெருமான் தெய்வயானை வள்ளிநாயகி சமேதமாய் மயில்வாகனத்தி லாரோகணித்தபடி அத்தூண்விம்பத்தி லெழுந்தருளிக் காட்சிதர, அது கண்ட வருணகிரிநாதர் தேகபரவசராகி யெழுந்து பணிந்து சிறிது திரையை விலக்கினர். அப்பொழுது பிரபுடதேவராசன் முதலாயினோர் அங்குதித் தோங்கிய பேரொளியைக் கண்டமாத்திரத்திற் கண்கள் மழுங்கினவர்களாய் நடுங்கிச சரீரம் வியர்த்து, சரவணபவ : சரவணபவ : என் றுச்சியிற் கூப்பிய கையினராய் ஒருபுறத் தொதுங்கி நின்றார்கள். இப்படித் தமது பத்தனுடைய வேண்டுகோளுக் கிரங்கிக் காட்சிதந்த தல்லாமல் பிரபுடதேவ ராசன் முதலாயினோர்க்குந் தமது சுயம்பிரகாசத் தன்மையைக் காட்டியருளிய கந்தவேளானவர் அத்தூண் விம்பத்திற்றானே கலந்துகொண்டபின அருணகிரிநாதர் வெளிவர, அவரை யரசனுதியோர் காணக்கூடாதவர்களாகிப் பின்னரவ ரருட்பிரசாதத்தால தங்கள் கண்மழுக்கறக்கண்டு பலமுறை பணிந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற் குவித்துநின்று அழலிடைப்பட்ட மெழுகுபோல் நெஞ்சமுருகி உடம்பெங்கு முரோமாஞ்சிதம் பூத்து உரைதடுமாறி கரையற்ற வினயக்கட

லுளமூந்தி ஆனந்தக்கூத்தாடினார்கள். அப்பொழு தருணகிரி நாதர் பிரபுடதேவ ராசனை நோக்கி, ஓ அரசனே! அன்று நின்சபைக்கண் கூறிய சொல்லை இன்று நிறைவேற்றினேன. இனி நீ எம்பெருமான காட்சிதரற் கேதுவா யிருந்த இத் தூணத்தினை யொட்டி ஓர் திருக்கோயில் சமைத்திடுகவென்று கூறித் தம்மிருக்கை நோக்கிச் சென்றனர். உடனே பிரபுடதேவராசன அப்பணியை நிறைவேற்றலின்கண் ஊற்றமிக்கவ னாயினான். இவை யனைத்தையுங் கேள்வி யுற்ற சம்பந்தாண்டான் இனி நா மிவ் வூருக்குப் புறம்பாவதே சரியென்று மறு நாள் தன்னிருக்கையி னின்றும வெளிக் கொண்டு செல்பவன அருணகிரி நாதர் வசிக்கு மிடமாகிய கோயிற் கீழ்கோபுர வாய்தலின் வடபாரிசத் தலத்திற் சென்று அவரைக் கடும்பார்வையோடுங் கண்டு நின்று, என னிட முமையவளை வரவொட்டாமற் சூதிழைத்து அரசன முதலாயினோர்க்கு நின்பெருமையைக் காட்டி இறுமாந் திருக்கின்றனை போலும் - ஆ! ஆ! உன்பட்டிமை மிகநன்று: மிகநன்று: என்பனவாதிய பல நிந்தை வார்த்தைகளைப் பேசினான். அக்கால் பிரபுடதேவ ராசன அருணகிரிநாதரைத் தரிசிக்க வேண்டி அங்குவர, அது கண்ட சம்பந்தாண்டான் பின்னு மனம்பொறாதவனாய் இதனைச் சொல்லுகின்றான. ஓ அரசனே! இவனென்னை வஞ்சித்து வென்றவனேயன்றி உண்மையாக வென்றவனல்லன. அஃதிருக்கட்டும்: இவன தன்னிஷ்ட தேவதையால் ஆகாய கமனம்

பரகாயப் பிரவேசமுதலிய வித்தைகளைக் கற்றுள்ளவனா யினை தெய்வலோகத்துப் பாரிசாதமலரைக் கொண்டுவர வல்லனோவென்று சொல்லினன். அதுகேட்ட வரசன் மறுமொழியாடா திருந்தான். அருணகிரிநாத ரச்சமணமுனிவனை நோக்கி, ஐயா சம்பந்தாண்டாரே! நீர் கூறியது சரதமே: உமதிஷ்டப்படி நாளையுதயத்திற்கு அப்பாரிசாதப் பூவைக் கொணர்ந்து காட்டுகிறேன் நீர் போய் வாருமென்று கூறினர். அதுகேட்ட சம்பந்தாண்டான் அரசனிடத்தினின்றும் விடைபெற்று அப்பாற் போயினன். அரசனுமருணகிரிநாதரைப் பணிந்து விடைகொண்டு அரண்மனைக்கேகினன். இப்பா லருணகிரிநாதர் தமது வாக்கு நிண்ணயத்தை நிறைவேற்ற முயன்று கோபுர மேனிலைக்கண் தமதுடலை யிருத்தி அங்குயிர்மாய்ந் திருந்த கிளியினுடலிற் றாம்பிரவேசித்துச் சொர்க்கலோகஞ்சென்று, கற்பகப் பூங்காவிற் சண்முகதேவருடைய திருநாமஸ்மரணஞ் செய்துகொண் டிருந்தனர். அதைத் தேவேந்திரனு மைராணியுங் கேட்டுவந்து கிளியினைக்கண்டு அதனா லதன் வரலாறனைத்து முணர்ந்து கரத்தேந்திச் சென்று, அதனைக் கைவிடாற் காற்றாராய்ச் சிலநா ளமுதமுதலியன வுண்பித்துப் பாராட்டி வந்தார்கள். இப்படி நாள் நீடவும் திருவண்ணாமலையார் கோயிலில் ஓர் விசேடதின நேரிட அத்தினங் கோபுரநிலைகடோறுந் தீபமமைப்போராகிய பரிசாரகருளொருவனால் அருணகிரிநாத ருடலினிருப்பைச் சம்பந்தாண்டா னுணர்ந்து சில

கோயிற் காரியக்காரரோடும் பிரபுடதேவராசனிடஞ் சென்று, உமது நண்பனென்னுடன் செய்துகொண்ட சபதத்தை நிறைவேற்றற் கேலாதவனாய்க் கோபுர மேனிலையிற்சென்றிறந்து கிடக்கின்றானென்று சொல்லினன். உடனே கோயிற் காரியத் தலைவர்களும் இவ்விசேடதின வாராதனைகட்கு விழுப்ப முண்டானதால் அப்பிரேதத்தை விரைவி லொழித்தல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். அங்ஙனமே பிரபுடதேவ ராசன் சிவபணிசெய்வோர்களால் அப்பிரேதத்தை யெடுப்பித்துத் தகனஞ்செய்வித்து, ஆலயத்திற்கு நேர்ந்த விழுப்பைக் கும்பாவாகனாதிக் கிரமங்களா லொழித்தனன். இப்பால் விண்ணுலகஞ்சென்ற கிளிநாதர் இந்திரனிடத்தினின்றும் பாரிசாதமலரைப் பெற்றுமீண்டு தமதுடலை யிருத்திய கோபுரத்தின்கண் வந்து காணாதவராய் வருந்தி, பின்னரதற்குநேர்ந்த காரணங்களைத் தமது ஞானவுணர்வினா லறிந்து இதுவுமென் னருளிறையாகிய சரவணபவன் செயலென்று தம்முள் தேறினவராய் அங்ஙனே யிக்கந்தரநுபூதி யென்னு நூலைத் தமது சிவந்தகூரிய திருவாயினைக் கொண்டு எழுதிமுடித்தனர். அக்காலவர் விண்ணுலகினின்றுங் கொணர்ந்த பாரிசாத மலரின் மணமானது அவ்வூரெங்கணும் பரிமளிக்கவும் அவ்வூரிலுள்ளோர் யாரும் விம்மித மடைந்தவர்களாகி, இந்தத் தெய்வீகமண மிங்குண்டானதற்குக் காரண மியாதென் றாயத்தொடங்கினவர்களாய்க் கோயிற்கோபுர மேனிலைவாய்தலில் ஓர் பொற்பாரிசாதப் பூவினோடு இவ்

வுலகத்தது போலாது தெய்வலோகத்ததுவா யுள்ள கிளியினைக் கண்டார்கள். அப்பொழுது பிரபுடதேவ ராசனுடைய மந்திரிகளிற் சிலரு மவ்வற்புதத்தினைக் கண்டுபோய் அரசனுக் கறிவித்தார்கள். அவனதைக் கேட்டமாத்திரத்தி லன்பு மச்சமுங் கொண்டவனாய் உடனே யக்கோபுரத்தருகில் வந்துகண்டு, இக்கிளிப்படிவ மருணகிரிநாதரேயென் றுணர்ந்து அவர் திருமேனிக்குத் தான்செய்வித்த வபராதத்தினைப் பற்றி மிகவு மனநொந்து வருந்தினன். அதுகண்ட கிளிநாதரவனைக்கூவி, ஓஅன்பிற்சிறந்த நண்பனே! நீ வருந்தற்க: வருந்தற்க: எனக்கு முன்னையவுடல் அன்னியமே யன்றோ? ஆறுலக்ஷ் இந்திரனோடு மைராணியோடு மிருந்து பழகி அமுதபோசன முண்டு அழியாநிலை பெற்று வந்ததினால், இனியெனக் கிதுவே சொந்தம். நீயொன்றற்கும் பரிபவப்பட வேண்டாம்: என்றுகூறித் தாம் கொணர்ந்த பாரிசாதப் பூவை அரசன் கையிற் றந்து வாழ்த்தி என் சபதத்தை நிறைவேற்றி விட்டேனென்று சொல்லிப் பறந்துபோயினர். அக்கா லவர் தமது வாயினால் வரைந்து விடுத்த கந்தரநுபூதிச் செய்யுட்களை யெல்லாம் பிரபுடதேவ மகாராஜன் மிகவாவலோடு மாய்ந் தெடுத்துத் தனது விழிகளிற் பலமுறை யொத்திக் கொண்டு, அமைச்சர் முதலிய பரிசனர்களையு மவ்வூரினரையு மொவ்வோர் பிரதி யெழுதிக்கொண்டு பாராயணம் பண்ணி வரும்படிக்குத் திட்டஞ்செய்து, தானு மிடைவிடாது பாராயணம்பண்ணிப் பூசித்து, அருணகிரிநாத ராக்கியாபித்துள்ள

கோயிற் றிருப்பணிகளை யெல்லாங் குறைவற நிறைவேற்றினவனாய் அந்திய காலத்தில் கந்தவேளுடைய கிருபைப் பெருக்கினால் மெய்ஞ்ஞான சம்பத்தையு மேலுலக வாழ்வையு மடைந்து முத்திபெற்றனன். அருணகிரிநாதர் கிளியுருக்கொண்டு சபதத்தினை நிறைவேற்றிய அற்புதமனைத்தையுஞ் சனசமூகத் திருந்து கண்ட சம்பந்தாண்டான முன்னைய வழுக்காறினு மேலிட்டவனாகி, உடனே தனமாளிகைக் கோடி தனக்குள் யாது கருதியோ உக்கிரமாகாளி பூசை நடத்தி அப்பூசையி னேர்ந்த குறைபாட்டினால் அக்காளியின கையறைபட் டிறந்தான். அருணகிரிநாதர் கிளியுருப் பெற்றிருந்த கோபுரம் இன்றுகாறுங் கிளிக்கோபுரமென்னும் பெயரினால் வழங்கிவருகின்றது. இப்பாலவ்விடத்தினின்றும் பறந்துசென்ற கிளிநாதர் கைலையங்கிரிக்கு மேற்றிசையினுள்ள கந்தமாதனகிரியை யடைந்து சுப்பிரமணியக்கடவுளைத் துதிசெய்ய, உடனே யக்கடவு ளெழுந்தருளிவந்து அவரைத் தமது திருக்கரத்தி லேந்திச்சென்று பலமுறை முதுகைத் தடவுதல்செய் தாதரித்து, ஓ எமதன்புருவாகிய அருசுகமே! நீயென்றுமித் தெய்வீகவுருவத்தோ டழியாநிலைபெற்று எமக்கு மித்தேவியர்க்கு முவப்புண்டாக நின கிஞ்சுகவாயினாற் கொஞ்சுறு பாக்களைப் பாடிக்கொண் டிருத்தியென்று திருவாய்மலர்ந்தனர். அதுமுத லருணகிரிப்பெயர்வாய்ந்த கிளிநாதர் சண்முகதேவர் திருப்புயங்களினும் தெய்வகுஞ்சரியார் வள்ளிநாயகியார் திருக்கரங்களினு மிருந்துகொண்டு, அமுதத்தினு மினிய பாடல்களைப்பாடுந் தொழிலினராய்ச் சீவன்முத்தி நிலையிற் சீவித்திருந்தனர். இன்னு மந்த நிலையிற்றானே சீவித்திருக்கின்றனர்.

இந்நூல் வரலாறு முற்றிற்று.



உ

## அருள் விண்ணப்பம்.

இணைக்குறளாசிரியப்பா.

ஒப்புயர்வியாண்டுஞ்செப்பருமுக்கட்
பெம்மான்பண்டுருப்பெற்றியினுதிதரு
பீடுசால்றுமுகப்பிள்ளைகேண்மோ
பூம்புகார்செம்மற்புதல்வனிற்புனையனு

பூதிநூறைந்தேயாகின்
மற்றதிற்பலரால்வரைதொறுஞ்செறீஇய
வழுஉக்களைந்தெழுதாவரியிலிடுகென்னச்
சொப்பனத்திருளைவாய்த்தூயோனாகிச்
சொற்றதூஉநீயேயாகி
னுற்றவாறென்னுளுறீஇத்தெரித்தருளே.

### கட்டளைக்கலித்துறை.

ஆதாரனாறுமுகனேயென்றோர்ந்த வருணகிரி, நாதாரினக்குமொர்விண்ணப்பங்காண்சுக நல்லுருக கொண், டோதாவிருத்தவனுபூதிநூறைந்து முள்ளபடி, நீதாவெனக்கிந்த நீணிலத்தோர்பவ நீந்துதற்கே.

### அவையடக்கம்.

### கலிவிருத்தம்.

அருணைவாழ்கிளிக்கோனநுபூதியை
யிருணிறத்தமனத்தினேனின்சொலின்
பொருணையாதிடப்போதல்பொற்றூழிக்கோர்
கருணிபொட்டிடச்சாருதன்மானுமே.

---

இவையிற்றூலைப் பலகொண்டாயமுயனறவர் கருத்து.

உ

கடவுள் துணை.

# கந்தரநுபூதி.

[கந்தரநுபூதி - என்றது: கந்தரது அநுபூதிபெற்றுப் பாடிய நூலென விரிவதாகலின், ஆறுவதன் றொகைநிலைக்களத்துப்பிறந்த வன்மொழித்தொகையாய் இந்நூற்குக் காரணக்குறி. அநுபூதிக்கு அநுபவஞானமெனினும் பொருந்தும. இதனை "பேசாவநுபூதி பிறந்ததுவே" என்றதனாலு முணர்க.]

## விநாயகர் — காப்பு.

சந்தக்கலிவிருத்தம.

நெஞ்சக்கனகல்லுநெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள்சண்முகனுக்கியல்சேர்
செஞ்சொற்புனைமாலைசிறந்திடவே
பஞ்சக்கரவானைபதம்பணிவாம்.

## நூல்.

ஆடும்பரிவேலணிசேவலெனப்
பாடும்பணியேபணியாவருள்வாய்
தேடுங்கயமாமுகனைச்செருவிற்
சாடுந்தனியானைசகோதரனே. (க)

---

இந்நூன்முற்றுங் கலிப்பாவி னினமா யளவடி நான்கா னமைந்து கலிவிருத்தத்தின் பாற்பட்டுச் சந்தத்தமைந்த செய்யுளாகலின், சந்தக் கலிவிருத்தமெனப் பெற்றும. "அளவடி நான்கின கலிவிருத்தம்மே." என்பவாகலின.

உல்லாசநிராகுலயோகவிதச்
சல்லாபவிநோதனுநீயலையோ
வெல்லாமறவென்னையிழந்தநலஞ்
சொல்லாய்முருகாசுரபூபதியே. (௨)

வானோபுனல்பார்கனன்மாருதமோ
ஞானோதயமோகவிநான்மறையோ
யானோமனமோவெனையாண்டவிடந்
தானோபொருளாவதுசண்முகனே. (௩)

வளைபட்டகைமாதொடுமக்களெனுந்
தளைபட்டழியத்தகுமோதகுமோ
கிளைபட்டெழுசூருரமுங்கிரியுந்
தொளைபட்டுருவத்தொடுவேலவனே. (௪)

மகமாயைகளைந்திடவல்லபிரான்
முகமாறுமொழிந்துமொழிந்திலனே
யகமாடைமடந்தையரென்றயருஞ்
சகமாயையுணின்றுதயங்குவதே. (௫)

திணியானமனோசிலைமீதுனதா
ளணியாரரவிந்தமரும்புமதோ
பணியாவெனவள்ளிபதம்பணியுந்
தணியாவதிமோகதயாபரனே. (௬)

கெடுவாய்மனனேகதிகேள்கரவா
திடுவாய்வடிவேலிறைதாணினைவாய்

சுடுவாய்நெடுவேதனைதூள்படவே
விடுவாய்விடுவாய்வினையாவையுமே. (எ)

அமரும்பதிகேளகமாமெனுமிப்
பிமரங்கெடமெய்ப்பொருள்பேசியவா
குமரன்கிரிராசகுமாரிமகன
சமரம்பொருதானவநாசகனே. (அ)

மட்டூர்குழன்மங்கையர்மையல்வலைப்
பட்டுசல்படும்*படரென்றொழிவேன்
றட்டுடறவேல்சைலத்தெறியு
நிட்டூரநிராகுலநிர்ப்பயனே. (கூ)

கார்மாமிசைகாலன்வரிற்கலபத்
தேர்மாமிசைவந்தெதிரப்படுவாய்
தார்மார்பவலாரிதலாரியெனுஞ்
சூர்மாமடியத்தொடுவேலவனே. (க0)

கூகாவெனவென்கிளைகூடியழப்
போகாவகைமெய்ப்பொருள்பேசியவா
நாகாசலவேலவநாலுகவித்
தியாகாசுரலோகசிகாமணியே. (கக)

செம்மான்மகளைத்திருடுந்திருடன்
பெம்மான்முருகன்பிறவானிறவான்

---

* "பரிசென" எனவும் பாடம்.

சும்மாவிருசொல்லறவென்றலுமே
யம்மாபொருளொன்றுமறிந்திலனே. (கஉ)

முருகன்றனிவேன்முனிநங்குருவென்
றருள்கொண்டறியாரறியுந்தரமோ
வுருவன்றருவன்றுளதன்றிலதன்
றிருளன்றொளியன்றெனநின்றதுவே. (கங)

கைவாய்கதிர்வேன்முருகன்கழல்பெற்
றுய்வாய்மனனேயொழிவாயொழிவாய்
மெய்வாய்விழிநாசியொடுஞ்செவியா
மைவாய்வழிசெல்லுமவாவினையே. (கச)

முருகன்குமரன்குகனென்றுமொழிந்
துருகுஞ்செயறந்துணர்வென்றருள்வாய்
பொருபுங்கவரும்புவியும்பரவுங்
குருபுங்கவவெண்குணபஞ்சரனே. (கரு)

பேராசையெனும்பிணியிற்பிணிபட்
டோராவினையேனுழலத்தகுமோ
வீராமுதுசூர்படவேலெறியுஞ்
சூராசுரலோகதுரந்தரனே. (கசு)

யாமோதியகல்வியுமெம்மறிவுந்
தாமேபெறவேலவர்தந்ததனாற்
பூமேன்மயல்போயறமெய்ப்புணர்வீர்
நாமேனடவீர்நடவீரினியே. (கஎ)

உதியாமரியாவுணராமறவா
விதிமாலறியாவிமலன்புதல்வா
வதிகாவனகாவபயாவமரா
வதிகாவல்சூரபயங்கரனே. (கஅ)

வடிவுந்தனமும்மனமுங்குணமுங்
குடியுங்குலமுங்குடிபோகியவா
வடியந்தமிலாவயில்வேலரசே
மிடியென்றொருபாவிவெளிப்படினே. (ககூ)

அரிதாகியமெய்ப்பொருளுக்கடியே
னுரிதாவுபதேசமுணர்த்தியவா
விரிதாரணவிக்ரமவேளிமையோர்
புரிதாரகநாகபுரந்தரனே. (உ0)

கருதாமறவாநெறிகாணவெனக்
கிருதாள்வனசந்தரவென்றிசைவாய்
வரதாமுருகாமயில்வாகனனே
விரதாசுரசூரவிபாடணனே. (உக)

காளைக்குமரேசனெனக்கருதித்
தாளைப்பணியத்தவமெய்தியவா
பாளைக்குழல்வள்ளிபதம்பணியும்
வேளைச்சுரபூபதிமேருவையே. (உஉ)

அடியைக்குறியாதறியாமையினான்
முடியக்கெடவோமுறையோமுறையோ

வடிவிக்ரமவேன்மகிபாகுறமின்
கொடியைப்புணருங்குணபூதரனே. (உ௩)

கூர்வேல்விழிமங்கையர்கொங்கையிலே
சேர்வேனருள்சேரவுமெண்ணுமதோ
சூர்வேரொடுகுன்றுதொளைத்தநெடும்
போர்வேல்புரந்தரபூபதியே. (உ௪)

மெய்யேயெனவெவ்வினைவாழ்வையுகந்
தையோவடியேனலையத்தகுமோ
கையோவயிலோகழலோமுழுதுஞ்
செய்யோய்மயிலேறியசேவகனே. (உ௫)

ஆதாரமிலேனருளைப்பெறவே
நீதானொருசற்றுநினைந்திலையே
வேதாகமஞானவிநோதமனோ
தீதாசுரலோகசிகாமணியே. (உ௬)

மின்னேநிகர்வாழ்வைவிரும்பியயா
னென்னேவிதியின்பயனிங்கிதுவோ
பொன்னேமணியேபொருளேயருளே
மன்னேமயிலேறியவானவனே. (உ௭)

ஆனாவமுதேயயில்வேலரசே
ஞானாகரனேநவிலத்தகுமோ
யானாகியவென்னைவிழுங்கிவெறுந்
தானாய்நிலைநின்றதுதற்பரமே. (உ௮)

இல்லேயெனுமாயையிலிட்டனைநீ
பொல்லேனறியாமைபொறுத்திலையே
மல்லேபுரிபன்னிருவாகுவிலென்
சொல்லேபுனையுஞ்சுடர்வேலவனே (௨௯)

செவ்வானுருவிற்றிகழ்வேலவனன்
றொவ்வாததெனவுணர்வித்ததுதா
னவ்வாறறிவாரறிகின்றதலா
லெவ்வாறொருவர்க்கிசைவிப்பதுவே. (௩0)

பாழ்வாழ்வெனுமிப்படுமாயையிலே
வீழ்வாயெனவென்னைவிதித்தனையே
தாழ்வானவைசெய்தனதாமுளவோ
வாழ்வாயினிநீமயில்வாகனனே. (௩௧)

கலையேபதறிக்கதறித்தலையூ
டலையேபடுமாறதுவாய்விடவோ
கொலையேபுரிவேடர்குலப்பிடிதோய்
மலையேமலைகூறிடுவாகையனே. (௩௨)

சிந்தாகுலவில்லொடுசெல்வமெனும்
விந்தாடவியென்றுவிடப்பெறுவேன்
மந்தாகினிதந்தவரோதயனே
கந்தாமுருகாகருணாகரனே. (௩௩)

சிங்காரமடந்தையர்தீநெறிபோய்
மங்காமலெனக்குவரந்தருவாய்

சங்க்ராமசிகாவலசண்முகனே
கங்காநதிபாலக்ருபாகரனே. (௩௪)

விதிகாணுமுடம்பைவிடாவினையேன்
கதிகாணமலர்க்கழலென்றருள்வாய்
மதிவாணுதல்வள்ளியையல்லதுபின்
றுதியாவிரதாசுரபூபதியே. (௩௫)

நாதாகுமராநமவென்றரனு
ரோதாயெனவோதியதெப்பொருடான்
வேதாமுதல்விண்ணவர்சூடுமலர்ப்
பாதாகுறமின்பதசேகரனே. (௩௬)

கிரிவாய்விடுவிக்ரமவே * லிறையோன்
பரிவாரமெனும்பதமேவலையே
புரிவாய்மனனேபொறையாமறிவா
லரிவாயடியோடுமகந்தையையே. (௩௭)

ஆதாளியையொன்றறியேனையறத்
தீதாளியையாண்டதுசெப்புமதோ
கூதாளகிராதகுலிக்கிறைவா
வேதாளகணம்புகழ்வேலவனே. (௩௮)

மாவேழ்சனனங்கெடமாயைவிடா
மூவேடனையென்றுமுடிந்திடுமோ

* "ளிமையோர்" எனவும் பாடம்.

கோவேகுறமின்கொடிதோள்புணருந்
தேவேசிவசங்கரதேசிகனே. (௩௯)

வினையோடவிடுங்கதிர்வேன்மறவேன்
மனையோடுதியங்கிமயங்கிட * வோ
சுனையோடருவித்துறையோடுபசுந்
தினையோடிதணோடுதிரிந்தவனே. (௪0)

சாகாதெனையேசரணங்களிலே
காகாநமனார்கலகஞ்செயுநாள்
வாகாமுருகாமயில்வாகனனே
யோகாசிவஞானோபதேசிகனே. (௪௧)

குறியைக்குறியாதுகுறித்தறியு
நெறியைத்தனிவேலைநிகழ்த்திடலுஞ்
செறிவற்றுலகோடுரைசிந்தையுமற்
றறிவற்றறியாமையுமற்றதுவே. (௪௨)

தூசா † வணியுந்துகிலும்புனைவா
ணேசாமுருகாநினதன்பருளா
லாசாநிகளந்துகளாயினபின்
பேசாவநுபூதிபிறந்ததுவே. (௪௩)

சாடுந்தனிவேன்முருகன்சரணஞ்
சூடும்படிதந்ததுசொல்லுமதோ

* "லோ" எனவும் பாடம். † "மணி" எனவும் பாடம்.

வீடுஞ்சுரர்மாமுடிவேதமும்வெங்
காடும்புனமுங்கமழுங்கழலே. (சச)

கரவாகியகல்வியுளார்கடைசென்
றிரவாவகைமெய்ப்பொருளீகுவையோ
குரவாகுமராகுலிசாயுதகுஞ்
சரவாசிவயோகதயாபரனே. (சரு)

எந்தாயுமெனக்கருடந்தையுநீ
சிந்தாகுலமானவைதீர்த்தெனையாள்
கந்தாகதிர்வேலவனேயுமையாண்
மைந்தாகுமராமறைநாயகனே. (சசா)

ஆறாறையுநீத்ததன்மேனிலையைப்
பேறாவடியேன்பெறுமாறுளதோ
சீறாவருசூர்சிதைவித்திமையோர்
கூறாவுலகங்குளிர்வித்தவனே. (சஎ)

அறிவொன்றறநின்றறிவாரறிவிற்
பிறிவொன்றறநின்றபிரானலையோ
செறிவொன்றறவந்திருளேசிதைய
வெறிவென்றவரோடுறும்வேலவனே. (சஅ)

தன்னந்தனிநின்றதுதானறிய
வின்னம்மொருவர்க்கிசைவிப்பதுவோ
மின்னுங்கதிர்வேல்விகிர்தாநினைவார்
கின்னங்களையுங்கிருபைச்சுடரே. (சகூ)

மதிகெட்டறவாடிமயங்கியறக்
கதிகெட்டவமேகெடவோகடவே
னதிபுத்திரஞானசுகாதிபவத்
திதிபுத்திரர்வீறடுசேவகனே. (௫0)

* ஐயாருடலண்ணியமானனதா
றையாறையுநீயறிவித்தருள்வாய்
செய்யாறுமுகாதிகழ்வேலரசே
யையாகுமராவருளாகரனே. (௫௧)

காடும்மலையுங்கடலும்முருளச்
சாடுந்தனிவேலுடையாய்சரண
மாடும்மயில்வாகனனேசரணம்
† பாடும்வரதம்பரனேசரணம். (௫௨)

தெரியத்தெரியச் ‡ செயலுற்றிடுமோர்
அரியப்பொருளைச்சொலுநாளுளதோ
கரிபெற்றிடுமின்கணவாகுறமின்
பரியப்பெரிதும்பணியுத்தமனே. (௫௩)

பொறியும்புலனும்புகுதுன்மனமுங்
குறியுங்குணமுங்குடியுநெறியும்

---

* "ஐயாறுடனே யையாறையுமா, றையாறையுநீ யறிவித்திடுவா, யையாறுமுகத் தயில்வேலரசே" எனவும் பாடம். † "பாடும்மவர்" எனவும்பாடம். ‡ "செயறற்றிடுமுத்" எனவும்பாடம்.

பிறிதொன்றுமிலாநிலையானனினின்
றறியுந்தரமோவயில்வேலவனே. (௫௪)

களவும்படிறுங்கதமும்படுமெ
னளவுங்கதிதந்தருள்சேருமதோ
விளகுங்குமமின்னிரு * கொண்முலையும்
† புளகம்பரவப்புணர்வேலவனே. (௫௫)

மதமுஞ்சினமும்வளருந்தனுவே
சதமென்றுளருஞ்சனனிக்கெளிதோ
கதமுந்தியசூர்களையுங்குகநின்
பதமுஞ்சிதமும்பரமும்பெறவே. (௫௬)

மஞ்சைப்பொருவார்குழலார்மயலாற்
‡ பஞ்சைப்பொருவும்பணவர்பணியா
நெஞ்சைப்புரிவாய்நிகழ்மாமதியின்
பிஞ்சைப்புனையும்பெருமான்மகனே. (௫௭)

கல்லேனயலார்கவியைப்பொருளாப்
புல்லேனவரோடிதுபொய்யலவே
வல்லேயினிவந்தருளாயெனின்யா
னில்லேனிரையுணெடும்வேலரசே. (௫௮)

இரவும்பகலுந்துதிசெய்திருதாள்
பரவும்பரிசேபரிசாயருள்வாய்

---

* "தோண்" எனவும், † "புளகந்தழைய" எனவும் பாடம். ‡ "பஞ்சைப்பலதேவதையும்பரவா" எனவும் பாடம்.

கரவுண்டெழுசூர்களையக்கதிர்போல்
விரவுஞ்சுடர்வேல்விடுசேவகனே. (ருகூ)

நனவிற்படுநானிலமாதியைபுன்
கனவிற்பொருளாக்கருதாவெனைநீ
வினவிக்கொளுநாளுளதோவிதியை
சினவிச்சிறையிட்டருடேசிகனே. (சுO)

* ஞானந்தனைநல்கிநணற்கருமோர்
மோனந்தனையென்றுமொழிந்திடுவா
யானந்தநடத்தனளித்தருளும்
வானந்தொழுமாமயில்வாகனனே. (சுக)

மிகவுங்கொடியேன் † வினைவிண்டிடவந்
திகழும்பரமுந்தரவென்றிசைவாய்
சுகம்விஞ்சவிண்ணோர்தொழும்வேல்கொடுமுச்
சகமுந்தனிகாத்தருள்சண்முகனே. (சுஉ)

உனையேயலதோர்பரமுண்டெனவே
நினையேனிடையூழ்வினைநீடுமதோ
கனையேழ்கடல்போல்வருகாரவுணர்
முனையேதெறுசண்முகவேலவனே. (சுங)

நசையன்பினர்பானயவாதொழியின்
வசையுண்டெனுமவ்வழிநின்றருள்வாய்

---

* "ஞானந்தனிநின்று நடித்தல்விடா" எனவும் பாடம்.
† "விழியின்புறவந்" எனவும் பாடம்.

விசையம்புகல்சூர்வெருவப்பொருதெண்
டிசையும்புகழத்திகழ்வேலவனே. (௨௪)

பத்திக்கயலேனனிநின்பதமுஞ்
சித்திக்கவுழுந்திறமெய்துவனோ
புத்திக்கடலேபொரும்வேலரசே
முத்திக்கனியேமுனிபுங்கவனே. (௨௫)

காணாவிழியுங்கருதாமனமும்
வீணாய்விடுமுன்விதியோவிதியோ
பூணார்குறமின்புணரும்வனமு
நாணாதுநடந்திடுநாயகனே, (௨௬)

பண்டேதொடர்பற்றொருசுற்றமெனும்
வெண்டேரைமகிழ்ந்து * விழித்தழிவேன்
கண்டேகுறமங்கைதனைக்களவிற்
கொண்டேகடிதேகியகொற்றவனே. (௨௭)

† வளையுஞ்சகமாயையமயக்கில்விழுந்
துளையுந்துயரொன்றுமுணர்ந்திலையே
யளையுண்டபிரான்மருகாவடுசூர்
களையுஞ்சினவெங்கதிர்வேலவனே. (௨௮)

இலகுந்துடிநேரிடையார்விழிகூ
ரலகம்பெனவேயழியாதழிகோ

* "விளிந்திடவோ" எனவும் பாடம். † "விளையு" எனவும் பாடம்.

கலகந்தருசூர்கதறப்பொருதே
ழுலகும்புகழ்பெற்றிடுமோகையனே. (சுகூ)

வள்ளைக்குழைமங்கையர் * சிங்கியிலே
கொள்ளைப்படுமென்குறைதீருமதோ
வெள்ளைத்தனிமால்விடையன் புகழும்
பிள்ளைப்பெருமாளெனும்பெற்றியனே. (எ0)

வரிவேல்விழியாம்வலைவீசுமினார்
புரிவேதையிலேபொழுதைக்களைகோ
பரிவேடம்வளைந்ததுபோலொளிகான்
றெரிவேன்முனைமேலெழுசேவகனே. (எக)

முடலைச்சுமையாக்கைமுயர்ச்சிகெடா
நடலைச்சுமைவாழ்வைநயக்குமதோ
கடலைத்துகள்செய்திடுவேல்கடவும்
விடலைப்பெருமாளெனும்வித்தகனே. (எஉ)

விண்ணாள்பதமும்விரிநீர்புடைசூழ்
மண்ணாள்பதமும்மகிழேன்மகிழேன்
றண்ணாரமுதேசயிலப்பகையே
கண்ணாருனருட்கனியைப்பெறினே. (எங)

உறுகற்பகமென்றுணையேயடைவே
னிறுகற்பகையர்க்கிதமோதுமதோ

* "சிந்தையிலே" எனவும் பாடம்.

தெறுகற்சிலைகொண்டெயில்செற்றிடுபூண்
டறுகட்செவியன்றருபுத்திரனே. (௭௪)

பிணியும்பசியும்பெருகுந்துயரி
லணியுங்கழலூட்கயலாயயர்வேன்
கணியுங்குரவுங்கமழோதிமய
றணியும்படிவந்தருள்சண்முகனே. (௭௫)

கள்ளம்படுகட்கடையார்கடைதோ
றுள்ளம்படுமென்னுறுகண்களைவாய்
பள்ளம்படுநீரெனவேபணிவா
ருள்ளம்படுநீர்மைகொளுத்தமனே. (௭௬)

கல்லுங்கரையக்கவிபாடியிதஞ்
சொல்லுந்தொழிலேதொழிலாயயர்வேன்
கொல்லுந்தொழிலிற்கொடியோர்மடியச்
செல்லுஞ்சுடர்வேல்செறிபாணியனே. (௭௭)

மடிமைப்படினும்மயலுற்றிடினு
மடிமைக்குரியாரருள்சேருவரே
குடிமைக்கிலதோர்கொடி * கொங்கைதடம்
படிமைப்புயலேபரிவாயினியே. (௭௮)

பேயாகிலூன்றதினும்பிறிதென்
றூயாதெனைவந்தடிமைத்தொழில்கொண்

* "வெற்பனையிற்" எனவும் பாடம்.

டோயாதினிநீயுணர்வைத்தருவாய்
வாயாமுதேமயில்வாகனனே. (௭௯)

பொன்னுவல்கெடப்பொழியும்புகழோ
ரின்னாரினியாரெனவெண்ணுவரோ
துன்னார்கிளைவேரறவேதொடும்வேல்
மன்னாபொதுவாய்மழைபெய்திடுமே. (௮0)

துடிபட்டமடந்தையர்சூழையிலே
குடிபட்டிடுமென்குறைகட்டறுமே
வெடிபட்டெழுசூர்கிளைவேலொடுசென்
றடிபட்டிடவென்றமரும்பதியே. (௮௧)

கல்லேய்மனமுங்கணையேய்விழியும்
வில்லேய்நுதலும்பெறுமெல்லியர்வாய்ச்
சொல்லேபதமாய்த்துடிபட்டழிவோ
வல்லேனுயுமாறெவன்மஞ்ஞையனே. (௮௨)

சின்னஞ்சிறியோர்சிதைவேசெயினும்
பென்னம்பெரியோர்பிழைசூழ்குவரோ
கன்னங்கரியோன்மருகாகழியத்
தன்னந்தனியென்றனையாண்டவனே. (௮௩)

மாதோதகமாயையமயக்கவருஞ்
சூதோவெனமெய்த்துணியாவெனையின்
றேதோவருள்செய்வதிறைஞ்சிடுவார்
தீதோடவருஞ்சிவதேசிகனே. (௮௪)

தாயேயெனையாடனிவேலரசே
காயேபொருளாக்கணிகைவிந்மோர்
பேயேனிடையின்பெழுவந்தெளிதாய்
நீயேபிறவாநெறிதந்ததுவே. (௮௫)

சனகாதியருக்கரியாய்தமியை
யெனகாரணமாகவிரும்பினைநீ
கனகாசலவில்லிகளிக்கவரு
மனகாவமலாவமராபதியே.* (௮௬)

துனிநாளும்விடாதுதொடர்ந்தபவ
மினிநானணுகாமையியம்பினனால்
பனிநாண்மதிசூடிபணிந்துதொழுந்
தனிநாயகனாகியசண்முகனே. (௮௭)

என்னேரமுநின்னிருதாண்மலரைப்
பொன்னேயெனயான்புனையப்பெறினெ
னன்னேயமிதேயயில்வேலரசே
கொன்னேபிறவிக்குறைபெற்றிலனே. (௮௮)

அருளைத்தருநின்னடியிற்பணிவாய்
மருளைச்சிதையாதுமயங்குறுவேன்
குருளைத்தசையிற்குறியோன்வினவும்
பொருளைத்தெளியப்புகன்றசிகனே. (௮௯)

விதிவந்தனைசெய்விமலன்கழலே
கதியெனறடையார்கடனவதுவே

யதிபல்பிணியோடழிநல்குரவு
மதிசஞ்சலமுமறநுதியுமே. (௯0)

கலைகற்கினுமென் கவிபாடினுமெ
னிலைகற்கினுமென் னிணையும்புணரார்
* கொலைகற்றவரேகொடும்வஞ்சகரே
மலைகட்டறவென்றிடுவாகையனே. (௯௧)

கழுகார்தருவேற்கரநின்னருணீர்
முழுகார்குறுகார்முளரிக்கழல்கண்
டொழுகார்வினையூடுழல்வாரவரே
யழுகாதொழுநோயதிபாதகரே. (௯௨)

அனியாயமிதென்றவரேமடவார்
துனியாருறவுந்துயருங்களைவார்
கனியார்முருகன்கழல்பெற்றிடுவா
ரினியாரினியாரிவருக்கிணையே. (௯௩)

நவியென்றிடுகண்மடவார்நனிகேள்
செவியென்றிடில்வேள்புகழ்செல்லுமதோ
கவியென்றிடுநால்வளமுங்கமழப்
புவியென்றுமிருந்தொளிர்புண்ணியரே. ( )

அழியாநிலைதந்தருள்சேவலனை
விழியாலுணர்வார்விதிதம்புகலார்

* "கொலைகற்றிடும்வேல் கொடுவஞ்சகமா" எனவும் பாடம்.

பழியார்புகழார்பயினண்பிகவா
ரொழியாதொழிவாருலகியாவையுமே. (௩௫)

ஆளாயயில்வேளடியிற்படிவார்
கேளார்பிறரைக்கிறிசெய்தழியார்
மாளார்சமனுன்மறுகார்பகையான்
மீளார்வினையால்வெருவார்பவமே. (௩௬)

பொறியோனெனினும்புலையோனெனினுஞ்
சிறியோனெனினுந்தெளிவோரவரோ
குறியோனெனினுங்குருவானவர்பா
னெறியோடொழுகுநிலைபெற்றிடினே. (௩௭)

என்னேரமதோதெரியாதிறுநா
ளன்னேரமதொன்றாகாதெனமுன்
சொன்னேன்மனனேதுவலோதுவலோ
தன்னேர்குகனைச்சரணென்றடையே. (௩௮)

தொண்டாகியநந்துயர்தீருமருந்
துண்டாகியுமேனுலைவாய்மனனே
வண்டார்குழல்வள்ளிமணந்தருளுந்
தண்டாரயில்வேள்சரணந்துதியே. (௩௯)

வாழைக்கனிமாமதுரச்சுளை * யே
யேழைக்கெளிதாயினிதெய்திடுவாய்

---

* "தே, னேழைக்கரிதெனறிடுவாருளரோ" எனவும பாடம்.

பாழைப்பயிர்செய்திடுசிற்பரையின்
பேழைப்பொருளாகியபெ*ற்றியனே. (௪௦)

சதிகொண்டமடந்தையர்தம்மயலிற்
குதிகொண்டமனத்தனெனக்குறியேன்
மதிகொண்டநுதற்குறமங்கையுயந்
துதிகொண்டுமணந்தருடுய்பவனே. (௪௧)

ஊனேபொருளாயுழலுற்றடியேன்
வீணேகெடமுன்விதியோவிதியோ
பூணேயிமையோர்புகலேமகவான்
சேனைபெறவேல்விடுசேவகனே. (௪௨)

வாழ்வாருறவாய்மகிழ்வார்பலருந்
தாழ்வார்க்கருளுத்தமனீயலையோ
பேழ்வாயரவும்பிறைவெள்ளிறகுஞ்
சூழ்வார்சடையார்தொழுதேசிகனே. (௪௩)

முறுகுந்தழல்போன்முடுகுஞ்சமனென்
மறுகும்பொழுதம்மறவேன்மறவேன்
குறுகுங்குலிசன்குலவாரணமால்
பெறுகுஞ்சரிதோய்பெருமானடியே. (௪௪)

உருவாயருவாயுளதாயிலதாய்
மருவாய்மலராய்மணியாயொளியாய்க்

* "பேரொளியே" எனவும்பாடம்.

கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. (௧௦௫)

கந்தரநுபூதி முற்றுப்பெற்றது.

ஸ்ரீசண்முகதேவன் திருவருள்வாழ்க.

அருணகிரிநாதன் அருட்டுணையுண்டாகுக.

---

# இந்நூற் பிரபாவம்.

வெண்பா.

கன்மத் திரள்விழுமே காலன் கணக்கறுமே
நன்மைத் திரளனைத்து நண்ணுமே - இன்மையுற
வந்தவறு மைதநுனியை வாடுமே வாயாரக
கந்தனநு பூதியென்றக கால்.

வாக்கால் வரும்பவமும் வன்மனத்தா லாம்பவமு
நோக்கால் விளைபவமு நோக்கமிலா-தாகையினாற்
றீதிகொளச் செய்பவமும் பீடுசால் கந்தனநு
பூதிகொளப் பறந்து போம.

ஈத்திருவு மெக்கலையு மெய்ப்பேறு மெய்ப்பொருளு
மெத்திறமு மெச்சுகமு மெச்சிறு - நித்த
மநுபூதி யைத்தரித்து வோங்கயில்வேற் கந்த
னநுபூதி யைத்துதிக்க வாம.

வேலுமயிலுந்துணை.